# பட்டணமும் சூழலும் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 30 வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஆகஸ்ட் 13 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 வங்கிக் கணக்கிணக்கங்கள்

நிதிப்பிரமாண இல. 396 இன் பிரகாரம் 05 ஆண்டுகளிற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாத ரூபா 28,425 பெறுமதியான 10 காசோலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 23,419 ஆகும்.

#### 1.2.3 கணக்கய்விற்கான சான்றுகளின்மை

**பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2011 யூன் 30 இல் உள்ளவாறு 58 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 44,422,915 ஆகும்.

### 1.2.4 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| (i) VIII 178(5) ஆம் அத்தியாயத்தின் 16(1) ஆம் பிரிவு | கேள்வி கோரல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் 58 ஒப்பந்த வேலைகளுக்கு ரூபா 9,695,328 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) I ஆம் அத்தியாயத்தின் 5(xi) ஆம் பிரிவு | காசு களஞ்சியங்கள் போன்றன தொடர்பில் காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயத்தின் I இன் 5(xii) ஆம் பிரிவு | காசு களஞ்சியம் போன்றவைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான அளவு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) XII ஆம் அத்தியாயத்தின் 204 ஆம் பிரிவு | ஆண்டின் இறுதியில் காகிதாதிகள் மற்றும் முத்திரைகள் என்பன கணப்பீட்டுச் சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) XII ஆம் அத்தியாயத்தின் 217 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) நிதிப்பிரமாணங்கள்**

(i) நிதிப்பிரமாண இல. 371(2) — உப கட்டுநிதியானது உரிய செயற்பாடு முடிவடைந்தவுடன் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 33,231 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாண இல. 756 — மீளாய்வாண்டிற்கான வருடாந்த மெய்மையாய்வு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாண இல. 1646 — சபையின் 09 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 8,743 | 7,782 | 2,729 | 8,743 | 4,553 | 3,424 |
| (ii) | வாடகைகள் | 1,566 | 1,280 | 518 | 3,647 | 843 | 433 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,230 | 1,198 | 25 | 911 | 867 | 8 |
| (iv) | வேறு வருமானங்கள் | 30,279 | 27,312 | 674 | 27,007 | 30,733 | 2,020 |

### 2.1.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 1,663,352 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 முத்திரைக் கட்டணங்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக பெறவேண்டிய தொகை கணிப்பிடப்பட்டு கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 2.2 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 22,445 | 22,412 | 33 | 22,489 | 20,027 | 2,462 |
| ஏனையவை | 10,414 | 5,498 | 4,916 | 7,754 | 5,397 | 2,357 |
| உப மொத்தம் | 32,859 | 27,910 | 4,949 | 30,243 | 25,424 | 4,819 |
| மூலதனச் செலவினம் | 12,900 | 18,907 | (6,007) | 9,915 | 7,859 | 2,056 |
| முழு மொத்தம் | 45,759 | 46,817 | (1,058) | 40,158 | 33,283 | 6,875 |

## 2.3 மனித வள முகாமைத்துவம்

### 2.3.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 05 | 04 | 01 |
| இரண்டாம் நிலைத் தரங்கள் | 19 | 17 | 02 |
| ஆரம்ப தரங்கள் | 42 | 40 | 02 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 33 | (33) |
| | 66 | 94 | 28 |

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

ரூபா 10,810,636 பெறுமதியான வாகனங்களும் ரூபா 32,098,745 பெறுமதியான காணிகளும் ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.4.1 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன்கள் ரூபா 5,487,084 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகள் ரூபா 31,054 ஆகும்.

### 2.4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) ரூபா 300,000 பெறுமதியான புத்தகங்கள் கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 33,331 தொகையான முற்பணமானது 05 மாத தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் அறிவித்தல் பலகைக்காக ரூபா 109,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் ரூபா 851,300 தொகையான கணனி, நிழற்படப் பிரதி இயந்திரம் மற்றும் அச்சிடல் இயந்திரம் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(உ) கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் ரூபா 9,695,328 பெறுமதியான 58 நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

சபையினால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு